**<u>சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்</u>**

**<u>OS.No.173/2021</u>**

<u>வாதி தரப்பு சாட்சி–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணன் | தகப்பனார் பெயர் | : | நடுப்பையன்(எ) சின்னப்பையன் |
| கிராமம் | : | நரிப்பள்ளி, அம்பேத்கர் நகர் | வட்டம் | : | அரூர் |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 63 |

<u>Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 06th day of February 2026</u>

PW–1

1ம் வாதி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் 1ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

1. தாவா சொத்திற்கு வாதிகளின் தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ள கணினி சிட்டா (பட்டா எண்.1176) நகல் வா.சா.ஆ.1

2. 14.02.1988 ம் தேதியிட்ட வாதிகளின் தாயார் மாரி (எ) மாரியம்மாளின் இறப்பு சான்று நகல் வா.சா.ஆ.2

3. 12.11.2020 ம் தேதியிட்ட மாரி (எ) மாரியம்மாள் வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3

4. 20.03.2008ம் தேதியிட்ட தாவா சொத்து பொறுத்து அப்துல் ஜப்பார் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் (ஆவண எண்.113/2008) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4

5. 09.05.2008 ம் தேதியிட்ட தாவா சொத்து பொறுத்து ஒரு சாமுவேல்சந்திரசேகரன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண்.1614/2008) சான்றிட்ட ஆன்லைன் நகல் வா.சா.ஆ.5

6. 09.09.2010 ம் தேதியிட்ட தாவா சொத்து பொறுத்து ஒரு சாமுவேல்சந்திரசேகரன் பெற்ற கிரையத்தை ரத்து செய்ததற்கான கிரைய ரத்து ஆவணம் ஆவணம் (ஆவண எண்.4471/2010) சான்றிட்ட ஆன்லைன் நகல் வா.சா.ஆ.6

7. 19.12.2020ம் தேதியிட்ட சார் ஆட்சியரின் உத்தரவாணை நி.மு.எண்.2332/2020/அ6 அசல் வா.சா.ஆ.7

8. பசலி 1384 வாதிகளின் தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ள அடங்கல் அசல் வா.சா.ஆ.8

9. பசலி 1419 வாதிகளின் தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ள அடங்கல் அசல் வா.சா.ஆ.9

10. பசலி 1405 வாதிகளின் தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ள அடங்கல் அசல் வா.சா.ஆ.10

11. பசலி 1414 வாதிகளின் தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ள அடங்கல் அசல் வா.சா.ஆ.11

12. பசலி 1396 வாதிகளின் தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ள அடங்கல் அசல் வா.சா.ஆ.12

மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.06 17:01:36 +0530